# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## திருமணப் பதிவு (திருத்தம்)

**திருமணப் பதிவு கட்டளைச் சட்டத்தினை (அத்தியாயம் 112)**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **224 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007046 -1,000 (2013/03)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2:** இவ்வாசகம் திருமணப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 112) 24ஆம் பிரிவினை பதிவாளர் மற்றும் மாவட்டப் பதிவாளருக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தின் மாதிரியினை குறிப்பீடு செய்வதன் மூலம் திருத்துகின்றது.

**வாசகம் 3:** இவ்வாசகம் முதன்மை சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவினை மாவட்டப் பதிவாளருக்கு செலுத்த வேண்டிய கட்டணத் தொகையினைத் திருத்துவதன் மூலமும் கொடுப்பனவு மாதிரியினை குறிப்பீடு செய்வதன் மூலமும் திருத்துகின்றது.

**வாசகம் 4:** இவ்வாசகம் பதிவாளருக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தினை குறிப்பீடுசெய்வதன் மூலம் 34 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 5:** இவ்வாசகம் செலுத்தவேண்டிய கட்டணத்தொகை மற்றும் கட்டண மாதிரியினை குறிப்பீடு செய்வதன் மூலம் 38ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 6:** இவ்வாசகம் முத்திரையொட்டுவதற்குப் பதிலாக கொடுப்பனவினை செலுத்துவதற்கு விண்ணப்பதாரியினை தேவைப்படுத்துவதன் மூலம் 51 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 7:** இவ்வாசகம் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களை காலத்துக்குக் காலம் வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் கட்டணத்தினைத் திருத்துவதற்கு அமைச்சருக்கு தத்துவம் வழங்கும் வகையில் 62ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 8:** இவ்வாசகம் இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையினை மாற்றீடு செய்கின்றது.

ச.வ.ஓ. 6/2013

## திருமணப்பதிவு கட்டளைச் சட்டத்தினை (அத்தியாயம் 112) திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்

**1**. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, திருமணப்பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2013 சனவரி 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(அத்தியாயம் 112) இன் 24ஆம் பிரிவினைத் திருத்துதல்

**2**. திருமணப்பதிவுக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 112) 24ஆம் பிரிவானது (இது இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அப்பிரிவின் (6)ஆம் உபபிரிவினை பின்வரும் உபபிரிவினால் பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

> ''(6) 23ஆம் பிரிவின் (1), (2) அல்லது (3)ஆம் பிரிவின்கீழ் பிரிவின் பதிவாளருக்கு அல்லது மாவட்டப் பதிவாளர் ஒருவருக்கு தெரிவிக்கப்படும் ஒவ்வொரு அறிவித்தலும் அல்லது அதன் (4) ஆம் உபபிரிவின் கீழ் ஒவ்வொரு அறிவித்தலும் அத்தகைய பிரிவின் அல்லது மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்படக்கூடிய பற்றுச்சீட்டொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். இது முறையே பத்து ரூபா அல்லது முப்பது ரூபா அல்லது காலத்திற்குக்காலம் அமைச்சரினால் குறிப்பீடுசெய்யப்படுகின்ற அத்தகைய வேறு தொகையாக இருத்தல் வேண்டும்.''

அத்தியாயம் 112 இன் 27ஆம் பிரிவினைத் திருத்துதல்

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உபபிரிவினை பின்வரும் உபபிரிவினால் நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

> ''(4) மாவட்டப் பதிவாளருக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தலானது, அத்தகைய வெளிப்படுத்தலைச் செய்யும் திறத்தவர் நூறு ரூபாஅல்லது காலத்திற்குக் காலம் அமைச்சரினால் விதந்துரைக்கப்படுவதான அத்தகைய தொகை வெளிப்படுத்துநரினால் செலுத்தப்பட

2-PL 007011 -225 (2013/02)

வேண்டும் என்பதுடன் பதிவாளருக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் அத்தகைய நூறு ரூபா அல்லது குறித்துரைக்கப்பட்ட தொகை செலுத்தப்பட்டதனை உறுதிப்படுத்தும்வகையில் பதிவாளர்நாயகத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.''

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு அப்பிரிவின் (5)ஆம் உபபிரிவு பின்வரும் உபபிரிவின் மூலம் பதிலீடு செய்யப்படும் வகையில் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவினைத் திருத்துதல்*

''(5) அமைச்சர் அத்தகைய திருமணம் இடம்பெற்ற தினத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் பதிவாளரிடமிருந்து வேறாக பெற்றுக்கொள்வதுடன் திருமணக்கூற்று மாவட்டப் பதிவாளருக்கு மாற்றப்படுவதுடன் இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டணமொன்றுடன் திருமணம் இடம்பெற்ற மாவட்டத்தின் பதிவாளருக்கு அத்தகைய பதிவாளர் அத்தகைய பதிவுக்கான கட்டணமாக செலுத்தியிருத்தல் வேண்டும்.''

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு பின்வரும் உபபிரிவினை பதிலீடு செய்வதன் மூலம் அப்பிரிவின் (2)ஆம் உபபிரிவினை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

''(2) ஒரு வகுப்பைச் சேர்ந்த பெண் திறத்தினைப் பொறுத்தவரையில் அதனை அடுத்துவரும் உபபிரிவில் குறிப்பிடப்பட்டாலன்றி அல்லது மாவட்டப் பதிவாளரின் கருத்துக்கமைவாக அவ் உபபிரிவின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராகமாட்டார். அத்தகைய திருமணத்திற்கு எண்ணியுள்ள திறத்தவர்களின் ஒருவரது விண்ணப்பம் தொடர்பில் மூவாயிரத்து ஐந்நூறு என்ற கொடுப்பனவு செலுத்தியமைக்கு ஆதாரமாக மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீற்றுடன் காணப்படுதல் வேண்டும் என்பதுடன் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பெயருடையவர்கள் தெரிவுசெய்யக்கூடிய இடத்திலும் நேரத்திலும் திருமணத்தினை மேற்கொள்வதற்கு பதிவாளர் ஒருவருக்கு அதிகாரமளிக்கப்படும்.''.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவு பின்வரும் உபபிரிவின் மூலம் அப்பிரிவின் (2)ஆம் உபபிரிவினை பதிலீடு செய்வதனால் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

"(2) எழுதப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் ஒவ்வொரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதி தொடர்பிலும் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட அதன் பிரித்தெடுப்பு தொடர்பில் காலத்துக்குக்காலம் அமைச்சரினால் குறிப்பீடுசெய்யக் கூடிய தொகையினை விண்ணப்பதாரி செலுத்துதல் வேண்டும்."

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 62ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உபபிரிவில் "இரண்டாவது அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டணம்" என்ற சொல்லுக்கு "காலத்துக்குக் காலம் அமைச்சரினால் விதந்துரைக்கப்படக் கூடிய இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணம்" என்ற சொற்களை பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 62ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**8.** 2006ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாவது அட்டவணை பின்வரும் அட்டவணையினை பதிலீடு செய்வதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆவது அட்டவணை யினை மாற்றீடு செய்தல்*

**இரண்டாவது அட்டவணை** (பிரிவு 62)

| எதற்கான தீர்வை | யாருக்கு செலுத்துதல் | யாரினால் செலுத்தப்படுதல் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1. திருமண அறிவித்தலை அவரது அலுவலகத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் வழங்குதல். | பதிவாளர் | விண்ணப்பதாரி | 100.00 |
| 2. திருமண அறிவித்தலை அவரது அலுவலகத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் வழங்குதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | விண்ணப்பதாரி | 100.00 |
| 3. திருமண அறிவித்தலில் பதிவாளர் சான்றிதழினை வழங்குதல் | பதிவாளர் | திருமணத்தின் திறத்தவர்கள் | 100.00 |

| | | | |
|---|---|---|---|
| 4. திருமண அறிவித்தலில் பதிவாளர் சானறிதழினை வழங்குதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | திருமணத்தின் திறத்தவர்கள் | 100.00 |
| 5. பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தினை நடாத்துதல் | பதிவாளர் | திருமணத்தின் திறத்தவர்கள் | 750.00 |
| 6. பொது வணக்கத் தலத்தில் பதிவுசெய் யப்பட்ட இடத்தில் இடம்பெற்ற திருமணத் தினைப் பதிவுசெய்தல். | மாவட்டப் பதிவாளர் | திருமணத்தின் திறத்தவர்கள் | 750.00 |
| 7. பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தினை நடாத்துதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | திருமணத்தின் திறத்தவர்கள் | 750.00 |
| 8. 38 ஆம் பிரிவின்கீழ் பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே திருமணத்தினை நடத்துதல் | பதிவாளர் | திருமணத்தின் திறத்தவர்கள் | 1,500.00 |
| 9. 38 ஆம் பிரிவின்கீழ் பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே திருமணத்தினை நடத்துதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | திருமணத்தின் திறத்தவர்கள் | 1, 500.00 |

**9**. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1ஆந்தேதியிலிருந்து 2013, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடையும் வரை, பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் அல்லது விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் கட்டணங்கள், பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகையஎவரேனும் ஆளினால் செல்லுபடியானமுறையில் விதிப்பனவு செய்யப்பட்டதாக அல்லது சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

செல்லுபடியாக்குதலும் நட்டோத்தரவாதமும்.

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப் பகுதியின் போது விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்